# சிரங்கு (Scabies)

## 1. சிரங்கு (Scabies) என்றால் என்ன?

இது மிகச் சிறிய ஒட்டுண்ணியால் (mite) ஏற்படும் தொற்றாகும். இது எல்லா வயதினரையும், எல்லா தரத்தினரையும் பாதிக்கும்.

இது ஒருவரிடமிருந்து மற்றவருக்குப் பரவக்கூடிய ஒரு தொற்று நோயாகும்.

இந்த நோய் தொடுகை, ஆடை மற்றும் படுக்கை போன்றவற்றின் மூலம் ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு பரவகூடியது.

இது நெரிசலான இடங்களில் (மருத்துவமனைகள், பாடசாலைகள், வகுப்பறைகள், முதியோர் இல்லங்கள், குழந்தை பராமரிப்பு மையங்கள், சிறைச்சாலைகள் போன்றவை) எளிதில் பரவுகிறது.

## 2. இந்த நோயின் அறிகுறிகள் என்ன?

விரல்கள், கைகள், மணிக்கட்டுகள், மார்பகங்கள் மற்றும் பிறப்புறுப்புகளைச் சுற்றி அரிப்புடன் கூடிய சிறிய கொப்புளங்கள் உருவாகும். இரவு வேளைகளிலே அரிப்பு கூடுதலாக காணப்படும்,

சிறு குழந்தைகளுக்கு மேற்கூறிய இடங்கள் தவிர, முகம், உள்ளங்கைகள் மற்றும் உள்ளங்கால்களில் கொப்புளங்கள் தோன்றலாம்.

நோய்த்தொற்றுக்குப்பிறகு 2-3 வாரங்கள் வரை அறிகுறிகள் தோன்றாது என்பதை நினைவில் கொள்வது அவசியம்.

## 3. இதற்கான சிகிச்சை முறைகள் என்ன?

நோயாளி மற்றும் குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் (நோய் அறிகுறிகள் இருப்பினும் அல்லது இல்லாவிடினும்) ஒரே நேரத்தில் சிகிச்சை பெற வேண்டும்.

மருத்துவ ஆலோசனைப்படி சிகிச்சை பெறுவதுடன் அனைத்து ஆடைகள், படுக்கை விரிப்புக்கள், துடைக்கும் துண்டுகள் போன்றவற்றை நன்கு கழுவி, கடுமையான வெயிலில் உலர்த்த வேண்டும்.

மருந்து பூசப்பட்ட ஏதாவது உடற்பகுதியை கழுவ நேரிடின், மீண்டும் அந்த இடத்திற்கு மருந்தை பூச வேண்டும்.

## பெர்மெத்ரின் (Permethrin) சிகிச்சை

இதை கழுத்தின் கீழ் பகுதியிலிருந்து கால் விரல்கள் வரை முழு உடம்பிலும் தடவ வேண்டும்.

இதை தடவுவதற்கு முன் குளித்து, சருமத்தை சுத்தம் செய்து உலர வைக்க வேண்டும். சில நேரங்களில் குழந்தைகளுக்கு தலை மற்றும் முகத்தில் மருந்தை தடவ வேண்டிய அவசியம் ஏற்படலாம்.

மருந்தை உடலில் 12 மணி நேரம் வைத்திருக்க வேண்டும். (உதாரணமாக: மாலை 6.00 மணி முதல் மறுநாள் காலை 6.00 மணி வரை)

மறுநாள் காலையில் அனைத்து துணிகளையும் துவைத்துவிட்டு குளிக்கவும்.

மேற்கூறிய நடைமுறையை சரியாக 07 நாட்களுக்குப் பிறகு மீண்டும் செய்ய வேண்டும்.

## சல்பர் (Sulphur) சிகிச்சை

இது தொடர்ந்து மூன்று நாட்களுக்கு பயன்படுத்தப்பட வேண்டும். ஒருமுறை தடவினால், 24 மணிநேரம் வரை மருந்து உடலில் இருக்க வேண்டும்.

நோயாளிக்கு மிகவும் பொருத்தமான சிகிச்சையை மருத்துவரே தீர்மானிப்பார்.

நோய்குணமடைந்த பின்பு 2-3 வாரங்களுக்கு அரிப்பு நீடிக்கலாம் என்பதை நினைவில்கொள்ளவும். நோய் தொடரக்கூடும் என்று நீங்கள் சந்தேகித்தால், உங்கள் மருத்துவரை மீண்டும் தொடர்புகொள்ளவும்.